அதுமட்டுமல்ல, மாவட்டப் பெருந்திட்ட வளாகத்தில் மாவட்ட விளையாட்டு வளாகம் அமைக்க இடம் வழங்குமாறு அல்லது சிக்கண்ணா அரசு கல்லூரியிலேயே அமைக்க பரிந்துரை செய்யுமாறு மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கோரப்பட்டுள்ளது. உரிய கருத்துரு பெறப்பட்டவுடன் அரசின் நிதிநிலைமையைக் கருத்திற்கொண்டு திருப்பூர் மாவட்டத்திற்கான மாவட்ட விளையாட்டு வளாகம் உடனடியாக அமைக்க மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 262, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சீனிவாசன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

262—

விடுதி

***5526—திரு. ஆர். சீனிவாசன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆற்காடு தொகுதி, வாழைப்பந்தல் அரசினர் மேல்நிலைப் பள்ளிக்கு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை சார்பில் மாணவர், மாணவியர் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கின்றேன்.

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாம் முறையாக முதல்வராகப் பதவியேற்ற பின், இந்த 12 மாத குறுகிய காலத்திற்குள் 56 விடுதிகளை இங்கே அமைப்பதற்காக (மேசையைத் தட்டும் ஒலி) ஆணையிட்டு பெரிய ஒரு வரலாற்றுச் சாதனை படைத்துவிட்டார்கள். அதிலும் முந்தைய ஆட்சியில் ஒவ்வொரு விடுதியிலும், 50 மாணவர்கள்

2012 மே 14]

அல்லது மாணவியர்களைச் சேர்ப்பார்கள். ஆனால் மாண்புமிகு அம்மா அவர்கள் 100 மாணவர்கள் அல்லது மாணவியர்களைச் சேர்ப்பதற்கு ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–05

அதிலும் சிறப்பு என்னவென்றால், தேவைப்பட்டால் அதைவிட அதிகமாக 10 சதவிகிதம் மாணவர், மாணவியர்களைக் கூடுதலாக சேர்த்துக்கொள்ளலாம் என்றும் ஆணையிட்டு, மிகப் பெரிய வரலாற்றுச் சாதனையைப் படைத்துள்ளார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்வி, ஆற்காடு தொகுதி, வாழப்பந்தல் அரசினர் மேல்நிலைப் பள்ளிக்கு மட்டும் கேட்டுள்ளார்கள். குறிப்பிட்ட பள்ளிகளுக்கு, குறிப்பிட்ட கல்லூரிகளுக்கு என்று பிரத்தயேகமாக பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைமூலம் விடுதிகள் அமைக்கப்படுவதில்லை. மேலும், வாழப்பந்தல் அரசினர் மேல்நிலைப் பள்ளியினை விரிவாக்கும்பட்சத்தில் அங்கு மாணவர், மாணவியர்கள் மிகக் குறைந்த அளவிலேயே தங்கும் வாய்ப்பு உள்ளதால், அங்கு விடுதி அமைக்கும் அவசியம் எழவில்லை என்பதைத் தங்கள்மூலம் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சீனிவாசன் அவர்கள்.

திரு. ஆர். சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வாழ்ந்தவர் கோடி, மறைந்தவர் கோடி, மக்கள் மனதில் நிற்பவர் யார்?" என்கின்ற புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் பாடலில் உள்ள வைர வரிகளுக்கேற்ப நாட்டு மக்களுக்காக நல்லதோர் ஆட்சி தந்து, எண்ணற்றச் சாதனைகளை மக்களுக்காகச் செய்து, நாட்டுக்காகவும், நாட்டு மக்களுக்காகவும், வாழ்ந்து உலகமே வியக்கும்வண்ணம் ஓராண்டில் பல்வேறு சாதனைகளை நிகழ்த்திக்காட்டியிருக்கின்ற, நாங்கள் தினந்தோறும் வழிபடுகின்ற எங்கள் குலதெய்வம் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அமர்ந்திருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஓர் ஆண்டில் நூறாண்டு சாதனைகளைப் படைத்து, சரித்திரங்களைப் படைத்த மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், ஆற்காடு தொகுதி, வாழப்பந்தல் அரசினர் மேல்நிலைப் பள்ளியில் 1,800 மாணவர், மாணவியர்கள் படிக்கிறார்கள். அவர்கள் தினந்தோறும் பள்ளிக்குச் சென்று வீடு திரும்பும்போது இரவு 8–00 மணி ஆகிறது. கிராமப்புறங்களில்

போக்குவரத்து வசதி இல்லாத காரணத்தினாலும், மாணவர்கள் பள்ளிக்குச் சென்று வீடு திரும்ப இரவு 8–00 மணி ஆகின்ற காரணத்தினாலும், வாழப்பந்தலில் விடுதி அமைக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டு மாண்புமிகு அம்மா அவர்களிடம் அந்த மனு வைக்கப்பட்டுள்ளது. தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் வாழப்பந்தலில் வரும் நிதியாண்டில் அந்த விடுதியை மாணவ, மாணவியர்களுக்கு அமைத்துத் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாழப்பந்தல் அரசினர் மேல்நிலைப் பள்ளி, நான் கடைசியாக பட்டதாரி ஆசிரியராகப் பணியாற்றிய பள்ளியாகும். அங்குள்ள மாணவ, மாணவியர்கள் குறிப்பிட்ட 4 கிலோ மீட்டர் அல்லது 5 கிலோ மீட்டர் தூரத்திலிருந்துதான் அந்தப் பள்ளிக்கு வந்து செல்கிறார்கள். இருந்தாலும், அவசியம் ஏற்படும்பட்சத்தில் உறுப்பினரின் கோரிக்கை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.*

[குறிப்பு: *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

2. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்

(அ) தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் 50 விழுக்காடு இருக்கைகளை அரசே நிரப்பி பயிற்சிக் கட்டணத்தைச் செலுத்துவது குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இன்று பேரவை விதி 110–ன்கீழ் நான்கு அறிக்கைகளை அளிக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கேட்டுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*